# தாரமங்கலம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரண கூட்டம்

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாத கூட்டத்தொடர் நவம்பர் மாதம் 03.11.2023 ஆம் தேதி வெள்ளிகிழமை முற்பகல் 11.00 மணிக்கு தாரமங்கலம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

**தீர்மானம் எண்.608 (1)**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் அக்டோபர்–2023 ஆம் மாதத்தில் நிகழப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| அக்டோபர் | 0 | 0 | 0 | 9 | 8 | 17 | 0 | 0 | 0 |

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.609 (2)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1வது வார்டு பள்ளக்காடு சாமியப்பன் வீடு முன்புறம், பம்பாய்காரர் வீடு முன்புறம், ரங்கன் வீடு முன்புறம், ரங்கன் வீடு பின்புறம் ஆகிய பகுதிகளில் 4 தெருவிளக்குகள், ராஜீவ்காந்தி நகர் பகுதி–1 பிட்டர் வீடு முதல் துளசிதாஸ் வீடு வரை 5 தெருவிளக்குகள் மற்றும் ராஜீவ்காந்தி நகர் பகுதி–2 சுந்தரம் வீடு முன்புறம், சந்திரன் வீடு முன்புறம், கந்தசாமி வீடு முன்புறம், கணேசன் வீடு முன்புறம், செல்வி வீடு முன்புறம் மற்றும் முத்து சுகந்தி வீடு முன்புறம்–2 ஆகிய பகுதிகளில் 7 தெருவிளக்குகள் ஆக மொத்தம் 16 தெருவிளக்குகள் புதியதாக கம்பி இழுத்து அமைத்திட உத்தேச செலவினம் ரூ.3.19/– இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 1704/2023/இ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.610 (3)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.4 ஏரிக்கோடி காட்டு வளவு, குறுவாம்பாறை ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் அமைத்தல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.4.80/– இலட்சத்தினை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1700/2023/இ1)
2. செலவினத்தினை குடிநீர்நிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.611 (4)**

தாரமங்கலம் நகராட்சி, SWM திட்டத்தின் கீழ் நுண் உயிரி செயலாக்க முறை (Bio-Mining) செயல்படுத்துவதற்கு இயக்குநர், சுற்றுப்புற சூழல்மையம், அண்ணா பல்கலைக்கழகம்,கிண்டி, சென்னை – 25 அவர்களுக்கு PMC தொகை ரூ.2.36/– இலட்சம் நாள்.11.10.2023 ஆம் தேதி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் 27.10.2023 ஆம் தேதி PMC தொகை ரூ.1.77/– இலட்சம் ஆக மொத்தம் ரூ.4.13/– இலட்சம் பொதுநிதியிலிருந்து செலுத்தியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.552/2021/பி1)
2. செலவினத்தினை பெதுநிதியில் மேற்கொண்டமைக்கு பின்னேற்பு வழங்கப்படுகிறது.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.612 (5)**

அரசாணை (நிலை) எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.07.12.2021. அரசாணையின் படி தாரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தாரமங்கலம் நகராட்சி 27 வார்டுகளை கொண்ட இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 30222 ஆகும் தற்போதைய மக்கள் தொகை 32035 ஆகும். தாரமங்கலம் நகராட்சி எல்லைக்குள் 18 குக்கிராமங்கள் உள்ளன. மேற்படி 18 கிராமங்களில் 10க்கு மேற்பட்ட கிராமங்கள் நகராட்சி அலுவலகத்திலிருந்து குறைந்த பட்சம் 3 அல்லது 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்நகராட்சி எல்லை பகுதிகளில் குடிநீர் வழங்கல், பொதுசுகாதார பணிகள், திடக்கழிவு பணிகள், தொற்றுநோய் தடுப்பு பணிகள், சாலைபணிகள், கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் தெருவிளக்கு

பணிகள் மற்றும் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் போன்ற அடிப்படை திட்ட பணிகளை ஆய்வு செய்யவும் அவசரப்பணிகள் மற்றும் அத்தியாவசிய பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும் அலுவலக பணிகளை செவ்வனவே செய்திடவும் நகராட்சி பொறியாளருக்கு அலுவலக பயன்பாட்டிற்கு ஈப்பு வாகனம் தேவையாக உள்ளது. மேலும் தாரமங்கலம் நகராட்சியிலிருந்து சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மற்றும் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் சுமார் 25 கி.மீ தொலைவில் உள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திட்டபணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டத்திற்கு கலந்து கொள்ளவும், மேலும் சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக்கூட்டம், மாதாந்திர கூட்டங்களுக்கு கலந்து கொள்ளவும் நகராட்சி பொறியளாருக்கு ஈப்பு வாகனம் தேவை என்பதால் மேற்கண்ட சூழ்நிலையில் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய ஈப்பு வாகனம் ஜெம் போர்ட்லில் உள்ள விலைவிகிதப்படி நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று கொள்முதல் செய்திடவும் மற்றும் புதிய ஈப்பு வாகனம் வாங்கிட ஆகும் செலவினத்தினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1699/2023/இ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.613 (6)**

தாரமங்கலம் நகராட்சி, நமக்கு நாமே திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.22.00/– வார்டு எண்.23, சண்முகா நகர் முதியோர் இல்லம் பின்புறம் கழிவுநீர் கால்வாய் அமைப்பதற்கு பொதுமக்களின் பங்களிப்பு தொகையாக ரூ.4.50 லட்சம் வங்கி வரைவோலையாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை நமக்கு நாமே திட்டத்தின் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1507/2023/இ1)
2. செலவினத்தினை நமக்கு நாமே திட்டத்தின் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.614 (7)**

தாரமங்கலம் நகராட்சி, 2023–2024 ஆம் ஆண்டிற்கு திட்டப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரராக பதிவு செய்து கொள்வதற்கு, ராஜா ராணி அன்டு கோ, மேட்டுமாரனூர், ஆரூர்பட்டி (அஞ்சல்) தாரமங்கலம் என்பவர் விண்ணப்பம் அளித்துள்ளதின் பேரில் ஒப்பந்ததாரர் பதிவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.839/2022/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.615 (8)**

தாரமங்கலம் நகராட்சி பழைய அலுவலக வளாகத்தின் அருகில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான பேட்டரியால் இயங்கும் வாகனம் (BOV) மின்னேற்றம் செய்ய ஏதுவாக பிளக்பாய்ன்ட் பொருத்தும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.30,000/– பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1698/2023/இ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.616 (9)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.24–இல் உள்ள சமுதாய கூடத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக குளியறையுடன் கூடிய கழிப்பறை, கழிவுநீர் வெளியேற்றம் மற்றும் சமுதாய கூடத்திற்கு பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.4.80/– இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1701/2023/இ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.617 (10)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வெட்னிகரடு மேற்கு பகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்தி தர புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மினிமோட்டார் மற்றும் 2000 லிட்டர் மினிடேங்க் அமைத்து குடிநீர் வழங்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.3.50/– இலட்சம் குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1576/2023/இ1)
2. செலவினத்தினை குடிநீர்நிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.618 (11)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வெட்னிகரடு விநாயகர் கோவில் அருகில் உள்ள 2000 லிட்டர் மினிடேங்க் உடைந்துள்ளதால் மினிடேங்க் குட்டு உயரப்படுத்தி புதியதாக மினிடேங்க் அமைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.1.00/– இலட்சம் குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1587/2023/இ1)
2. செலவினத்தினை குடிநீர்நிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.619 (12)**

தாரமங்கலம் நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் 1 முதல் 5 வரை அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியருக்கு 25.08.2023 அன்று காலை சிற்றூண்டி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமலுக்கு வரப்பெற்றது. இந்நகராட்சியை சார்ந்த 9 பள்ளிகளில் மாணவ/மாணவியருக்கு பள்ளி வேலை நாட்களில் காலை உணவு பரிமாறிட மகளிர் சுயஉதவிக்குழு மூலம் 16 நபர்கள் நியமிக்கப்பட்டது. 1 நபருக்கு ரூ.1500/– வீதம் 16 நபர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டி இருப்பதால் இச்செலவினத்தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.739/2022/எச்1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.620 (13)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான பேருந்து நிலையம் சைக்கிள் ஸ்டேண்டிற்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கு திருமதி.ஆர்.திவாகரி, குத்தகைதாரர் அவர்களால் ரூ.70,500/–ற்கு ஏலம் எடுக்கப்பட்டு, தொடர்ந்து 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட்டு குத்தகைதாரரால் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை இனத்திற்கு மூன்றாண்டு காலம் 31.03.2023 அன்று முடிவடைந்த நிலையில் அன்றைய தேதியில் பணியிலிருந்த அலுவலர்களால் எவ்வித ஏல நடவடிக்கையும் எடுக்கப்படாதது தற்போது தெரிய வந்துள்ளது. மேற்படி குத்தகைதாரர் திருமதி.திவாகரி தற்போதைய சூழலில் தனக்கே உரிமம் புதுப்பித்து வழங்கக்கோரி 28.10.2023 அன்று நேரில் ஆஜராக இவ்வருடத்திற்கான குத்தகை தொகையினை செலுத்தி கடிதம் சமர்பித்துள்ளார். இப்பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1383/2023/அ1)

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.621 (14)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1.ஓமலூர் – சங்ககிரி – திருச்செங்கோடு – பரமத்தி சாலை கி.மீ.9/6–12/0, 2. தாரமங்கலம் – நங்கவள்ளி – குஞ்சாண்டியூர் சாலை கி.மீ.0/0–5/0, 3. தொளசம்பட்டி சாலை கி.மீ.0/0–7/0 ஆகிய அரசு சாலைகளில் உள்ள பலன் தரும் மரங்களுக்கு இந்நகராட்சியின் மூலம் ஏல நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக, உதவிக் கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை, க(ம)ப, ஓமலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7/2023/உ/நாள்.27.07.2023–இன்படி 2023–2024–ஆம் ஆண்டு சராசரி மகசூல் குத்தகைத் தொகை ரூ.7617/– ஐ “ உதவிக் கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை, க(ம)ப, ஓமலூர்” அவர்களுக்கும், சரக்கு மற்றும் சேவைவரி ரூ.1371/–ஐ “DIVISIONAL ENGINEER, HIGHWAYS, C&M, EDAPPADY” அவர்களுக்கு வழங்கவும், மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1288/2023/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.622 (15)**

தாரமங்கலம் நகராட்சி, மேலாளர் இருக்கைக்கான சேர், டேபிள் கொள்முதல் செய்ததற்கான விலைப்பட்டியல் திருமுருகன் ஸ்டீல் ஒர்க்ஸ் என்பவருக்கு ரூ.15500/—யை வழங்க செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1288/2023/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.623 (16)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.16—இல் உள்ள கோவில் வீடு பகுதியில் கால்வாய் வடிகால் மற்றும் சின்டெக்ஸ்டேங்க் அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.2.50/— இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1697/2023/இ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.624 (17)**

தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 வார்டுகளில் தினமும் பெறப்படும் குப்பைகளை, தரம் பிரித்து எடுக்கப்பட வேண்டி உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படும் MCC சென்டரில் குப்பை கழிவுகளை பிரிக்கப்பட வேண்டியுள்ளதால் TATA HITAC HI- EX210 LC என்ற வாகனத்தை பயன்படுத்தி விலைப்புள்ளிக்கோரி குப்பை கழிவுகளை அகற்றுவதற்கு உத்தேச செலவின தொகை ரூ.3.50/— இலட்சம் வழங்க இச்செலவினத்தொகையை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1600/2023/எச்1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.625 (18)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 24வது வார்டில் தற்போது கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றும் பணி நடைபெற்று வருவதால் எம்.ஜி.ஆர்.காலனி ஆர்ச் அருகில் உள்ள முதல் தெருவில் 3 கம்பங்களும் மற்றும் தங்கசாலை வீதி எதிர்புறம் ஒரு கம்பமும் சாலையின் குறுக்கே அமைந்துள்ளது. எனவே மேற்கண்ட மின்கம்பங்களை அகற்றி சாலையின் ஒருபுறமாக அமைத்து கொடுக்க உதவிபொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், தாரமங்கலம் அவர்களிடமிருந்து 17.10.2023 ஆம் தேதிய கடிதத்தில் 1 கம்பத்திற்கு மதிப்பீடு ரூ.26644/— 2 கம்பங்களுக்கு மதிப்பீடு தொகை ரூ.48817/— ஆக மொத்தம் ரூ.75461/— தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.745/2022/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.626 (19)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.10 தொட்டிக்கார கைலாச முதலி தெரு பகுதியில் சுமார் 50 வீடுகள் உள்ளன. அங்கு வசிக்கும் பொதுமக்களின் அடிப்படை தேவையான குடிநீர் சரிவர வாரத காரணத்தினால் அப்பகுதியில் மெயின் லைனியிலிருந்து 80 மீட்டர் நீளத்திற்கு புதியதாக பைப்லைன் அமைக்க உத்தேச செலவினம் ரூ.50,000/— பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1702/2023/இ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.627 (20)**

தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.12, பெருமாள் கோவில் பகுதியில் 9 வால்வுகள் தனித்தனியாக இருந்த லைனை ஒன்றாக இணைத்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கு வால்வு சேம்பர் கட்ட அவசியம் உள்ளது. ஆகையால் வால்வு சேம்பர் அமைப்பதற்கு வார்டு எண்.19 மொட்டைய மாரிமுத்து முதலியார் தெரு பகுதியில் போர்பைப்லைன் தரைமட்டத்திற்கு அமைத்து தரவும், வார்டு எண்.20 நாகமாரியம்மன் கோவில் கிழக்குபாவடி அருகில் பைப்லைன் 30மீட்டர் அமைப்பதற்கு புலவன் சந்து பகுதியில் சிறுசிறு இடங்களுக்கு 3 மீட்டர் அளவிலும், 5 மீட்டர் அளவிலும் டிரைன்

அமைப்பதற்கு அவசியம் உள்ளது. ஆகையால் இப்பணிக்கான உத்தேச செலவினம் தொகை ரூ.2.75/– இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.1703/2023/இ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.628 (21)**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் IUDP கடை எண்.5–ற்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து முதல் மூன்றாண்டிற்கான உரிமத்திற்கு கடந்த 20.10.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்தில், ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. பொது ஏலத்தில் கீழ்கண்ட நபர்கள் கலந்துகொண்டு உச்ச கேள்வி கோரியுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரர் பெயர்/ முகவரி | உச்ச கேள்வி தொகை (ரூ) |
|---|---|---|
| 1) | திரு.பெ. கோபி த/பெ பெரியாகவுண்டர்<br>5வது வார்டு, வேட்னிகரடு,<br>தாரமங்கலம். | ரூ.2700/– |
| 2) | திரு.பா. கண்ணன் த/பெ பாப்பண்ணன்,<br>22வது வார்டு, பொத்தியாம்பட்டி<br>தாரமங்கலம். | ரூ.2825/– |
| 3) | திரு.டி.கார்த்திகேயன் த/பெ தனராஜன்,<br>எண்.1, தெற்கு ரத வீதி,<br>தாரமங்கலம். | ரூ.2800/– |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.956/2023/11)
2. பேருந்து நிலையம் IUDP கடை எண்.5–ற்கு கடந்த 17.06.2022, 24.06.2022, 05.07.2022, 28.07.2022, 05.01.2023, 13.01.2023, 31.01.2023, 14.02.2023, 15.03.2023, 23.03.2023 மற்றும் 30.03.2023 ஆகிய தேதிகளில் ஏலம் விடப்பட்டு மேற்படி ஏலத்தில் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.
3. பேருந்து நிலையம் IUDP கடை எண்.5 குத்தகை உரிமைக்கு உச்ச கேள்வியாக ரூ.2825/– என திரு.பா.கண்ணன் த/பெ பாப்பண்ணன் என்பவர் கோரியுள்ளார். இது சென்ற முறை ஏலத்தொகை ரூ.8069/–யை காட்டிலும் ரூ.5244/– குறைவாகவும்,

மூன்றாண்டு சராசரி ஏலத்தொகை ரூ.7750/–யை காட்டிலும் ரூ.4925/– குறைவாகவும் சென்றுள்ளது.

4. மேற்படி பேருந்து நிலையம் IUDP கடை எண்.5, 10.10.2019 முதல் நாளது வரை ஏலம் போகாமல் காலியாக உள்ளது. இதனால், இந்நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி உச்ச கேள்வித்தொகை ரூ.2825/–ஐ ஏற்கவோ, நிராகரிக்கவோ மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.629 (22)**

தாரமங்கலம் நகராட்சி, தினசரி மார்கெட் சுங்க வசூல் குத்தகைதாரராகிய திரு.ரா.இளஞ்சி த/பெ ராமக்கவுண்டர் என்பவர் நிர்ணயக்கப்பட்ட தினசரி மார்கெட் சுங்க வசூல் கட்டணத்தை விட கூடுதலாக வசூல் செய்வதாக 1.திரு.கே.ரவி த/பெ கந்தசாமி, 2.திரு.செந்தில்குமார் த/பெ வைத்தியப்பன், 3.வைத்திலிங்கம் த/பெ கந்தசாமி மற்றும் 4.திரு.ராஜேந்திரன் த/பெ கந்தசாமி ஆகியோரால், இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.2154 of 2023 in WP.No.18901 of 2023–ற்கு எதிர்வாதுரை தாக்கல் செய்ய ஏதுவாக Drafting and Vetting report தயாரித்தமைக்கு திரு.மகேஷ் நந்து, வழக்கறிஞர் அவர்கள் வழங்கிய பில் பட்டியல் தொகை ரூ.5,000/–க்கு அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை திரு.ர.விக்னேஷ் ராஜா, இளநிலை உதவியாளரால் செலவினம் மேற்கொள்ளப்பட்டதை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து தனியருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.744/2023/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.630 (23)**

தாரமங்கலம் நகராட்சியின் 20.09.2023 முதல் 20.10.2023 வரை கோப்புகள் படிவங்கள் மற்றும் இதர கோப்புகள் ஜெராக்ஸ், அலுவலக கணினி பயன்பாட்டிற்கு தேவையான பேப்பர் மற்றும் பைண்டிங் செலவு செய்தமைக்கு தொகை ரூ.19074/–யை ராசி பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.07/2023/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.631 (24)**

தாரமங்கலம் நகராட்சி, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித்திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு ரூ.2.36 லட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.6 மோட்டுப்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் (9watts Latter type 150 watts 6nos) பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு சேலம் மண்டல செயற்பொறியாளரிடம் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 19.10.2023 ஆம் தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கே.ஜி.கன்ஸ்டிரக்சன்ஸ் என்ற நிறுவனம் வழங்கியுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ.(ல) | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.6 மோட்டுப்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல். (9watts Latter type 150 watts 6nos) | 2.36 | கே.ஜி.கன்ஸ்டிரக்சன்ஸ் | மதிப்பீட்டை விட –0.12 குறைவு |
| | | | ராஜா, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.804 அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.747/2023/இ1)
2. மேற்காணும் செலவினத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித்திட்டம் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.632 (25)**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுது பொருட்கள் விண்ணப்ப படிவங்கள், எம்எப் படிவங்கள், பதிவேடுகள் போன்றவை 2023–2024 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்களை அரசு அனுமதி பெற்ற கூட்டுறவு அச்சக தொழிற்சேவை சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/– இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.786/2023/சி1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.633 (26)**

தாரமங்கலம் நகராட்சி, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித்திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.13 மேற்கு ரத வீதி, ஊர்சாவடி அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு சேலம் மண்டல செயற்பொறியாளரிடம் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 19.10.2023 ஆம் தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கே.ஜி.கன்ஸ்டிரக்சன்ஸ் என்ற நிறுவனம் வழங்கியுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ.(ல) | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.13–ல் மேற்கு ரத வீதி, ஊர்சாவடி அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல். | 5.00 | கே.ஜி.கன்ஸ்டிரக்சன்ஸ் | மதிப்பீட்டை விட –0.12 குறைவு |
| | | | ராஜா, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.804 அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.1053/2023/இ1)
2. மேற்காணும் செலவினத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித்திட்டம் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.634 (27)**

தாரமங்கலம் நகராட்சி, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித்திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.12 அருள்மிகு கைலாச நாதர் ஆலயம் அருகில் சன்னதி வீதியில் உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு சேலம் மண்டல செயற்பொறியாளரிடம் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 19.10.2023 ஆம் தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி இந்துஸ்தான் பவர் டெக்னாலஜி என்ற நிறுவனம் வழங்கியுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ரூ.(ல) | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி வார்டு எண்.12–ல் அருள்மிகு கைலாச நாதர் ஆலயம் அருகில் சன்னதி வீதியில் உயர்கோபுர மின்விளக்கு | 5.00 | இந்துஸ்தான் பவர் டெக்னாலஜி | மதிப்பீட்டை விட –0.10 குறைவு |
| | | | ஜெனின் பவர் | மதிப்பீட்டை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைத்தல். | | டெக்னாலஜி | விட 15.10 அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.1053/2023/இ1)
2. மேற்காணும் செலவினத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித்திட்டம் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.635 (28)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.13 பெத்தான் நஞ்சப்ப முதலி தெரு பகுதியில் போர்வெல் டேங்க் உயரப்படுத்தி பைப்லைன் அமைத்தல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.2.50/– இலட்சம் குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.1732/2023/இ1)
2. மேற்காணும் செலவினத்தினை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.636 (29)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.14 வெள்ளாளர் தெரு பகுதியில் போர்பைப்லைன் மூலம் 3 தெருக்களுக்கு பைப்லைன் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தி தர பைப்லைன் அமைக்க உத்தேச செலவினம் ரூ.1.00/– இலட்சம் குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.1729/2023/இ1)
2. மேற்காணும் செலவினத்தினை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.637 (30)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.27 கந்தசாமி கோவில் எதிரில் உள்ள மெத்தகடை சந்து பகுதியில் சிறுபாலம் மிக பழுதடைந்துள்ளதால் அதனை அகற்றி விட்டு கல்வெட்டு அமைக்க உத்தேச செலவினம் ரூ.1.30/– இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.1730/2023/இ1)

2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(தீர்மானிக்கப்பட்டது)

**தீர்மானம் எண்.638 (31)**

தாரமங்கலம் நகராட்சி, வார்டு எண்.17 எஸ்.பி.கோவிந்தராஜ் வீடு அருகில் உள்ள போர்வெல் பழுதடைந்துள்ளதால் அதனை எடுத்துவிட்டு புதியதாக போர்வெல் மோட்டார் அமைக்கவும் மற்றும் வார்டு எண்.17 ஈரோடு கண்ணன் வீடு முதல் செங்குந்தர் யோக விநாயகர் கோவில் வரை 75 மீட்டர் அளவிலுள்ள 3 இன்ச் பைப்லைன் அமைக்க உத்தேச செலவினம் ரூ.1.30/– இலட்சம் குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (கோ.எண்.1731/2023/இ1)

2. மேற்காணும் செலவினத்தினை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**